www.agaram.lk

FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 13 (2020) | இந்திய வரலாறு – I | நேரம் :- 1 மணித்தியாலம் |
|---|---|---|

**பகுதி I**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- ***01* தொடக்கம் *10* வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அப்பெயரில் ஒன்று ஏதோ காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது வேறுபட்டுள்ளது. அதை இனம் கண்டு அந்த இலக்கத்தினை அடைப்புக்குள் இடுக.**

1) 1. காவேரிப்பட்டினம் 2. பாருகச்சா 3. தேவகிரி
4. சுப்பராக 5. தாம்ரலிப்தி ( )

2) 1. நாசிக்கல்வெட்டு 2. கிர்னார்கல்வெட்டு 3. தௌலி கல்வெட்டு
4. கால்கிக்கல்வெட்டு 5. சொபாறா கல்வெட்டு ( )

3) 1. சம்பால் 2. ஜமுனா 3. கோமதி
4. ராவி 5. கோகிரா ( )

4) 1. பசுபதி 2. பிரம்மா 3. மகாயோகி
4. சிவன் 5. யோகீஸ்வரன் ( )

5) 1. ருதுசம்ஹாரம் 2. மேகதூதம் 3. மிருச்சகடிகம்
4. குமார சம்பவம் 5. விக்கிரமோர்வசி ( )

6) 1. பாலவர் 2. சங்கர் 3. கிரேக்கர்
4. சகர் 5. குஷாணர் ( )

7) 1. உஜ்ஜைனி 2. சுவர்ணகிரி 3. தக்ஷசீலம்
4. தோசலி 5. கலிங்கம் ( )

8) 1. யது 2. பூரு 3. அணு
4. புலிந்த 5. துர்வாஸ் ( )

9) 1. எல்லோரா 2. அஜந்தா 3. பாக்
4. கார்லி 5. சாராநாத் ( )

10) 1. வத்ஸ 2. கோலிய 3. சாக்கிய
4. மல்லர் 5. லிச்சபிகன் ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

❖ **11 - 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடிப்பெயர் ஒன்றுடன் ஒன்று பொருந்தமில்லை. பொருந்தாத அச்சோடியைத் தெரிந்து அதன் இலக்கத்தினை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

11) 1. பகவதி சூத்திரம் - சமணம்
2. பகவத் கீதை - இந்து
3. கதாவத்துப்பகரண - தேரவாதம்
4. சூத்திராலங்கார - தாந்திரஜான
5. மகா பிரக்ஞா பாராமிதா - மகாயானம் ( )

12) 1. பாஞ்சாலம் - குரு
2. குஸிநார - மல்ல
3. வைசாலி - லிச்சவி
4. மதுரா - ஆரசேன
5. தக்ஷசீலம் - காந்தாரம் ( )

13) 1. கோசலாதேவி - பிம்பிசாரன்
2. ராஜ்ய ஸ்ரீ - கிர்ஹவர்மன்
3. தத்ததேவி - சமுத்திரகுப்தன்
4. துஙுவ தேவி - இரண்டாம் சந்திரகுப்தன்
5. மோரா - அசோகன் ( )

14) 1. மகதம் - பிம்பிசாரன்
2. கோசலம் - பிரசேனஜித்
3. அங்க - சிசுநாகன்
4. காசி - பிரமதத்தன்
5. உஜ்ஜயினி - சந்திரப்பிரத்ஜோதன் ( )

15) 1. வாரணாசி - கங்கை
2. சுப்பாரக - குப்தி
3. பாருகச்சம் - நர்மதை
4. இந்திரப்பிரஸ்தம் - யமுனா
5. பிரதிஸ்தானம் - கோதாவரி ( )

❖ **16 – 20 வரையுள்ள வினாக்கள் X, Y நிரலில் தரப்பட்டுள்ளன. அவற்றுள் X நிரல் Y நிரல் பொருந்தக்கூடிய விதத்தில் ஒழுங்கமைத்து கீழே தரப்பட்டுள்ள சேர்மானங்களுள் சரியான விடைத்தொகுதியை தெரிவு செய்க. அதன் இலக்கத்தினை அடைப்புக்குறிக்குள் இடுக.**

16)

| ‘X’ | ‘Y’ |
|---|---|
| 1. வாணியல் | A. ரகுவம்சம் |
| 2. இலக்கணம் | B. ராஜதரங்கினி |
| 3. மெய்யியல் | C. சாங்கிய சூத்திரம் |
| 4. வரலாறு | D. சூர்ய சித்தாந்தம் |
| 5. இதிகாச காவியம் | E. மகாபாஷ்யம் |

1. DECBA 2. ECDAB 3. BCDEA 4. ABCDE 5. CDABF ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

| | 'X' | 'Y' |
|---|---|---|
| 17) | 1. புரோஹிதர் | A. சேனாதிபதி |
| | 2. சேனாதி | B. தேர்ச்சாரதி |
| | 3. சங்கிர ஹிந்திரி | C. அரசனின் ஆலோசகர் |
| | 4. பாகதுக | D. வரிசேர்ப்பவர் |
| | 5. ஆத | E. பாண்டகாரன் |

1. BCDEA 2. ECDAB 3. CAEDB 4. ACDEB 5. DCEAB ( )

| | 'X' | 'Y' |
|---|---|---|
| 18) | 1. தேவகிரி | A. யாதவர் |
| | 2. வேர்சி | B. மைத்திரிகா |
| | 3. துவார சமுத்திரம் | C. ராஷ்ரகூடர் |
| | 4. வலபி | D. கொய்சலர் |
| | 5. மான்யகேத | E. சானுக்கியர் |

1. BCDEA 2. ECBAD 3. DCEAB 4. AEDBC 5. CDEAB ( )

| | 'X' | 'Y' |
|---|---|---|
| 19) | 1. தோரமான | A. குஷாணர் |
| | 2. நஹாப்பணன் | B. ஹுணர் |
| | 3. டெமெற்றியோஸ் | C. சக – சத்ர்ப |
| | 4. ஹுவிஷ்க | D. பிரதிஹார |
| | 5. வத்ஸராஜ | E. இந்து – கிரேக்கர் |

1. ACDBE 2. BCEAD 3. CDEAB 4. DEABC 5. EACDB ( )

| | 'X' | 'Y' |
|---|---|---|
| 20) | 1. மகாபலிபுரம் | A. சுவரோவியங்கள் |
| | 2. மதுரா | B. பௌத்த சிற்பக்கலைப்பாணி |
| | 3. நாலந்தா | C. யாதவர் தலை நகரம் |
| | 4. அனுந்தா | D. பௌத்த பல்கலைக்கழகம் |
| | 5. தேவகிரி | E. இரதங்கள் |

1. ACDEB 2. BCDEA 3. CDABE 4. DCABE 5. EBDAC ( )

❖ ***21 – 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தாதுள்ளது. அப்பொருந்தாததை தெரிவு செய்து அதன் இலக்கத்தினை அடைப்புக்குறிக்குள் எழுதுக.***

21) சிந்துவெளி நகரத்திட்டமிடல்
1. நகரத்திட்டமிடலும் சுகாதாரப் பராமரிப்பும் சிந்துவெளி நாகரிகத்தில் மிக முக்கியமான அம்சமாகும்.
2. வீதிகளும் ஒழுங்கமைப்புகளும் திட்டமொன்றிற்கேற்ப அமைக்கப்பட்டிருந்தது.
3. சிந்துவெளி நகரில் கட்டடங்கள் கருங்கற்களினால் கட்டப்பட்டிருந்தது.
4. வீதிகளின் ஒழுங்கமைப்புகளின் அகலம் 9 தொடக்கம் 34 அடிவரை காணப்பட்டது.
5. முக்கியமான நகரங்கள் கோட்டை, தாழ்நகரப் பகுதி என இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

22) இருக்கு வேதகாலம்
1. விவசாயமே இருக் வேதகால மக்களின் பிரதான தொழிலாகும்.
2. சமுதாயம் இனக்குழு நிலையில் இருந்தது.
3. அக்கினி, இந்திரன், வருணன் இக்காலத்திற்குரிய பிரதானமான தேவர்கள்
4. இக்காலத்தில் பலம் பெற்ற இராச்சியங்கள் கங்கைச் சமவெளியில் எழுச்சி பெற்றன.
5. வேதகால மக்கள் விக்கிரகங்களை வழிபடவில்லை. (   )

23) கங்கை – யமுனை சமவெளியின் செல்வாக்கு.
1. மண்வளத்தினால் செல்வம் கொழிந்தது.
2. வலிய பேரரசுகள் அமைந்தமை.
3. மிகுந்தளவில் கனிப்பொருள்கள் உள்ளமை.
4. கலை, கட்டடக்கலை, இலக்கியம், ஆகியவற்றில் முன்னேற்றம்.
5. இப்பிரதேசத்தின் முக்கியத்துவத்தினை முதன் முதலாக அறிந்தவர் அரசன் அசோகன் ஆவான். (   )

24) சுவன் - சாங்
1. இவர் தக்ஷீலப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றார்.
2. சுவன் - சார் சீனத் துறவி ஆவார்.
3. மிஹிராகுலனின் நடவடிக்கைகளை அவர் பதிவு செய்துள்ளார்.
4. பல்லவரின் தலைநகரான காஞ்சிக்கு அவர் போனது.
5. ஹர்ஷவர்த்தனனின் ஆட்சிகாலத்தில் இந்தியாவுக்கு வந்த இவர் கன்னோசியில் நடைபெற்ற பௌத்த மாநாட்டில் பங்கு பற்றினார். (   )

25) குப்தநிர்வாகத்தின் பிரதான அம்சங்கள்
1. இறைமை அதிகாரம் அரசனுக்குரியது.
2. ஒற்றாடல் முறையில் சமயகுருமார்கள் மட்டுமே பங்குபற்றினார்கள்.
3. அமைச்சரவை
4. இராணுவ அமைப்பு
5. பிரதேச நிர்வாகம் அரசர்கள், ராஜப் பிரதிநிதிகள் என்போரின் பொறுப்பானது. (   )

❖ ***26 – 30 வரையுள்ள ஒவ்வொன்றுக்குப் (A), (B), (C), (D) என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடையாகும் சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்க.***

| | |
|---|---|
| (A) யும் (B) மாத்திரம் சரியாயின் | 1 எனவும் |
| (A) யும் (C) மாத்திரம் சரியாயின் | 2 எனவும் |
| (B) யும் (C) மாத்திரம் சரியாயின் | 3 எனவும் |
| (C) யும் (D) மாத்திரம் சரியாயின் | 4 எனவும் |
| வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் | 5 எனவும் |

அடைப்பு குறியினுள் எழுதுக.

26) கி.மு 6 ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் நிலவிய குடியரசுகள்.
(A) கி.மு 6 ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் 16 குடியரசுகள் இருந்தன.
(B) இந்தக் காலத்தில் கண (ம்) சங்க (ம்) என்னும் இரு சொற்களால் குடியரசுகளை குறிப்பிட்டனர்.
(C) வஜ்ஜி என்னும் கூட்டரசில் வஜ்ஜி, லிச்சவி முதலான எட்டு இனக்குழுக்கள் அடங்கியிருந்தன.
(D) எல்லாக் குடியரசுகளும் வளம் மிக்க கங்கைச் சமவெளியில் இருந்தன. (   )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

27) பிம்பிசார மன்னன்.

(A) இவன் இராணுவப் படையெடுப்பு மூலம் தனது இராச்சியத்தை விசாலமாக்கினான்.

(B) மகத இராச்சியத்தின் தலை நகராகப் பாடவிபுரத்தை பிம்பிசாரன் அமைத்தான்.

(C) பிம்பிசார மன்னன் ஹரியங்க குலத்து முதல் அரசன் ஆவான்.

(D) 'செணிய' என்னும் பட்டப் பெயரால் இவன் அழைக்கப்பட்டான். ( )

28) ஹர்ஷவர்த்தனனுக்குப் பிற்பட்ட காலத்து வட இந்தியா.

(A) ஹர்ஷவர்த்தனை இறந்த பின்பு பல சிறிய சுதந்திரமான இராச்சியங்கள் தோன்றின.

(B) எனினும் பிரதீகாரர், பாலர், இராஷ்டிரகூடர் என்போர் முன்னிலை அடைந்தனர்.

(C) இம் மூன்று வம்சத்தவர், வட இந்தியாவில் மேலாதிக்கம் பெறுவதற்குப் போராடினார்கள்.

(D) மேலாதிக்கம் குறித்து போராட்டத்தில் அவர்களில் எவரும் வெற்றி பெறவில்லை. ( )

29) அஜந்தா ஓவியங்கள்.

(A) பெரும்பாலான ஓவியங்கள் சமயச்சார்பானவை.

(B) பெரும்பாலான ஓவியங்கள் புத்தரின் வாழ்க்கை வரலாறு ஜாதகக் கதைகள் என்பன பற்றியவை.

(C) அஜந்தா குகை ஓவியங்களின் புரவலர்களாகப் பல்லவர்கள் விளங்கினர்.

(D) ஓவியங்கள் பௌத்த சங்கத்தாரின் திருப்பணிகளாகும். ( )

30) சகர்கள்

(A) சாகர்கள் பிரதேச ஆட்சியாளர்கள் சத்ரபர் என அழைக்கப்பட்டனர்.

(B) சகர்கள் கைபர் கணவாயினூடாக இந்தியாவினுள் நுழைந்தனர்.

(C) சகர்கள் இந்தியாவில் தட்சசீலம், மதுரா உஜ்ஜேனி, மகாராஷ்டிரம் என்பவற்றில் மத்திய நிலையங்களை அமைத்தனர்.

(D) வங்காளம் வரை தமது ஆதிக்கத்தினை விஸ்தரித்து வெற்றி கண்டனர். ( )

❖ **31 – 35 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தினை அடைப்புக்குள் இடுக.**

31) எகிப்திய மன்னன்னான தொலபி பீல்டல் போஸிலை மௌரிய அரசசபைக்கு அனுப்பப்பட்ட தூதுவன்.

1. டெய்மாகோஸ் 2. மெகஸ்தெவில் 3. டியோடர்ஸ்
4. டியோனீசியஸ் 5. விஷ்ணுகுப்த ( )

32) அசோகன் தனது தந்தை இறந்த போது மாகாண அதிபராக எந்த நகரில் ஆட்சிபுரிந்தான்.

1. தக்ஷீலம் 2. உட்ஜனி 3. கோசலம்
4. சுவர்ணகிரி 5. பாடலிபுத்திரம் ( )

33) நான்காம் பௌத்த மாநாட்டின் பின்பு மகாயானசமய நூல்கள் எந்த மொழிகளில் எழுதப்பட்டன.

1. பிராமி 2. பிராகிருதம் 3. பாளி
4. தமிழ் 5. சமஸ்கிருதம் ( )

34) வாகாட இராச்சியத்தை ஆட்சி புரிந்த குப்த இராசகுமாரியின் பெயரைக் குறிப்பிடுக.

1. பிரபாவதி 2. குபேரநாகா 3. நந்தாதேவி
4. துருவதேவி 5. குமாரதேவி ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

35) பாருகுஹட்சத்தில் கடலோடு கலக்கும் ஆற்றின் பெயரைக் குறிப்பிடுக.
1. கிருஷ்ணாநதி 2. மகாநதி 3. நர்மதை
4. காவேரி 5. யமுனை ( )

❖ **36 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. அச்சோடி சரியாக பொருந்துவது எது என்பதை தெரிவு செய்து இலக்கத்தினை அடைப்புக்குறிக்குள் இடுக.**

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதும் முதலாம் கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| 36) | ராஜதரங்கினி கஷ்மிர் தேசத்து வரலாற்றை வர்ணிக்கின்றது. | பாணர் ராஜதரங்கிணியை எழுதினார். ( ) |
| 37) | குபதர் காலத்தில் வட இந்தியாவில் ஒரு தேரவாத பௌத்த மறுமலர்ச்சி ஏற்பட்டது | பௌத்தர் படிமம் குப்தர் காலத்திலே உற்பத்தியானது. ( ) |
| 38) | நர்மதாநதி ஹர்ஷவர்த்தனனின் இராச்சியத்தின் தென் எல்லையாக அமைந்தது. | ஹர்ஷவர்த்தனன் இரண்டு பௌத்த மாநாடுகளை நடத்தினான். அவை பிரயாக, கன்னோசி என்பவற்றில் நடந்தன. ( ) |
| 39) | சந்திர குப்த மௌரியரில் தாயார் நந்த வம்சத்து இளவரசி | நந்த வம்சத்து இறுதி அரசனாகிய தனநந்தனைக் கொலை செய்த பின் சத்திரகுப்த மௌரியன் ஆட்சி அதிகாரத்தை பெற்றான். ( ) |
| 40) | பாடலி புத்திர நகர நிர்வாகம் பற்றி மெகஸ்தினிஸ் விரிவாக வர்ணிக்கின்றார். | நகரப் பரிபாலனம் ஆறு குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொன்றிலும் ஐந்து உறுப்பினர்கள் இருந்தனர். ( ) |



agaram.lk

www.agaram.lk

FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 13 (2020) | இந்திய வரலாறு – II | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

**பகுதி I**

- **முதலாம் வினா கட்டாயமானது. பகுதி A**
- **பகுதி B , பகுதி C என்பவற்றில் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

**பகுதி A**

1) தரப்பட்டுள்ள இந்தியப்படத்தில் பின்வரும் இடங்களை குறித்து பெயரிடுக.

1. மொகஞ்சதாரோ
2. கௌசாப்பி
3. மக்ரான் கணவாய்
4. கண்னோசி
5. ஆரவல்லி 5
6. அஜந்தா
7. புருஷபுரம்
8. தக்சிலா
9. சுப்பாரக
10. கங்கை
11. பாருகச்ச
12. புருஷபுரம்

(1 x 12 = 12 புள்ளிகள்)

**பகுதி B**

2) வடமேல் இந்தியாவின் கணவாய்வழி இந்தியவரலாற்றை கற்பதற்கு உதவி செய்யும் விதத்தினை விளக்குக. (16 புள்ளிகள்)

3) ஹப்பாநாகரிகத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களை அறிஞ்ஞர்களின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க. (16 புள்ளிகள்)

4) கி.மு 6ம் நூற்றாண்டில் வளர்ச்சியடைந்திருந்த புதிய சமய சிந்தனைகள் பற்றி சுருக்கமாக விளக்குக. (16 புள்ளிகள்)

5) “மௌரிய பேரரசின் சிறந்த ஆட்சியாளன் அசோக மன்னனாவான்”

1. மௌரிய வம்சத்தின் ஆரம்ப ஆட்சியாளர் யார்? (1 புள்ளி)
2. அசோக மன்னனின் தர்மம் பற்றி அறிய உதவும் மூன்று கல்வெட்டுக்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
3. அசோக தர்மத்தின் உள்ளடக்கத்தினை சுருக்கமாக குறிப்பிடுக. (5 புள்ளிகள்)
4. அசோக மன்னனின் சமுக நலன்புரி நடவடிக்கைகளை மேற்படி கூற்றினை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க. (7 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

## பகுதி C

6) பின்வரும் தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு விடயங்களை விளக்குக.

1. குஷாணரது ஆட்சியில் பௌத்த பண்பாட்டு வளர்ச்சி. (8 புள்ளிகள்)
2. சாதவாகனரின் காலத்தக்கணத்தில் கலையும் கட்டிடக்கலை சிறப்பு. (8 புள்ளிகள்)

7) இரண்டாம் சந்திரகுப்த மன்னனின் அரசியல் செயற்பாட்டினை சாதனைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க. (16 புள்ளிகள்)

8)

9) பாலரது ஆட்சிக்காலத்தில் பண்பாட்டு முக்கியத்துவத்தினை பரிசீலனை செய்க.
(16 புள்ளிகள்)

10) பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக?

1. சுங்க அரச பரம்பரை
2. குப்தகால கல்வியும் இலக்கியமும்
3. கன்னோஜிக் வலிமை பெறல்
4. இராஷ்ட கூடர்

(8x2=16 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk